**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**
**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**
**2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 05ம் நாள் செவ்வாய்கிழமை**

**IA.303/2023**
**in**
**OS.249/2014**
**(CNR.NO.TNVP02-001204-2014)**

1. மகாதேவன்
2. மகாதேவி
3. மகாலட்சுமி
4. மலர்கொடி .... மனுதாரர்கள்/6 முதல் 9 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலாம்பாள் (இறந்தவர்)
2. தனலட்சுமி
3. தயாநிதி ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

**IA.304/2023**
**in**
**OS.249/2014**
**(CNR.NO.TNVP02-001204-2014)**

1. மகாதேவன்
2. மகாதேவி
3. மகாலட்சுமி
4. மலர்கொடி .... மனுதாரர்கள்/6 முதல் 9 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலாம்பாள் (இறந்தவர்)
2. தனலட்சுமி
3. தயாநிதி ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுக்கள் 14.08.2023 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 17.08.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 05.02.2024 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பா.கோவிந்தராஜன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சக்ரபாணி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

### IA.303/2023

மனுதாரர்கள்/6 முதல் 9 பிரதிவாதிகளால் இம்மனு சி.பி.சி. பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் வாதி தரப்பு விசாரணை Reopen செய்து வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

### IA.304/2023

மனுதாரர்கள்/6 முதல் 9 பிரதிவாதிகளால் இம்மனு சி.பி.சி. ஆர்டர் 18 விதி 17 சி.பி.சி.ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகளை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அவர்களை Recall செய்து ஆஜர்படுத்த வாதிகளுக்கு உத்திரவிட வேண்டி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. ஐ.ஏ.303/2023 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இந்த மனுவில் 1ம் மனுதாரர், 2 முதல் 4 மனுதாரர்கள் தன்னுடைய சகோதரிகள் என்றும் அவர்களுக்காகவும் தான் இந்த மனுவை தாக்கல் செய்கிறேன் என்றும் இந்த அசல் வழக்கில் கண்ட வாதிகள், தாவா சொத்துக்களில் தங்களுக்கு 2/3 பாகம், பாகம் உரிமை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இந்த வழக்கு வாதிகள் வழக்கு சொத்துக்கள் ஆதியில் முத்துசாமி மற்றும் அவருடைய குமாரர்களான அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர்கள் அடங்கிய இந்து கூட்டு குடும்பத்திற்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்கள் என்றும் கூறி இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர்கள் ஆகிய தாங்கள் வாதி கூறியுள்ள அங்கப்பன் அவர்களுக்கு வாரிசுகள் ஆகும் என்றும் எனவே அங்கப்பனுக்கு இந்து கூட்டு குடும்பத்தில் சேரவேண்டிய பாகத்தில் அவர்களுடைய வாரிசுகளான தங்களுக்கும் பாகயுரிமை உள்ளது என்றும் எனவே தங்களையும் இந்த வழக்கில் சேர்த்து தங்களுக்கு சேரவேண்டிய பாகத்தையும் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று கோரி தாங்கள் இந்த வழக்கில் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் தாங்கள் இந்த வழக்கில் 6 முதல் 9 பிரதிவாதிகள் ஆக சேர்ப்பதற்கு முன்பாகவே வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மேற்படி வா. சா.1 முதல் 4 சாட்சிகளை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்தும், மேற்படி வா.சா. 1 முதல் வா.சா.4 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும் அவர்களை Recall செய்ய வேண்டி வாதிகளுக்கு உத்திரவு பிறப்பிக்க கோரி இந்த மனுவினை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் இந்த வழக்கில் வாதி தரப்பு விசாரணை Reopen செய்து,

வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகளை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்திரவிடவேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது என்றும் இல்லையேல் தங்களுக்கு மிகவும் கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>3. ஐ.ஏ.303/2023ல் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு (2ம் எதிர்மனுதாரர் அதனை அடாப்ட் செய்து கொள்கிறார்) :-</u>**

தாவா அட்டவணை சொத்தில் 2/3 பாகம் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. 1, 2எதிர்மனுதாரர்கள் இறந்துபோன நாராயணன் என்பவரின் வாரிசு என்ற வகையிலும் 3ம் எதிர்மனுதாரர் தனபால் என்பவர் வாரிசு என்ற வகையிலும் 1/3 பாக உரிமை உள்ளதாக கோருகிறார்கள். மீதமுள்ள 1/3 அங்கப்பன் என்பவரின் மகன்கள் என்ற அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளுக்கும் இறந்துபோன மகளின் குழந்தைகள் என்பதால் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் பாத்தியமானது. எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணையில் மனுதாரர்கள் தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அங்கப்பன் என்பவரின் சட்டப்படியான பாகம் மறுக்கப்பட முடியாது. 2, 3 எதிர்மனுதாரர்கள் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டபோது மனுதாரர்களுக்கு அங்கப்பன் என்பவரின் சட்டப்படியான பாக உரிமைக்கு எதிராக எந்தவிதமான சாட்சியமும் அளிக்கப்படவில்லை. வா.சா. 3 மற்றும் வா.சா.4 தனி நபர் சாட்சிகள் அவர்களும் கூட்டுக்குடும்ப மற்றும் வாரிசுரிமை குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. ஒப்புக்கொள்ளப்பட்ட மனுதாரர்களின் உரிமை சாட்சியமளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

**4. ஐ.ஏ.304/2023 மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இந்த மனுவில் 1ம் மனுதாரர், 2 முதல் 4 மனுதாரர்கள் தன்னுடைய சகோதரிகள் என்றும் அவர்களுக்காகவும் தான் இந்த மனுவை தாக்கல் செய்கிறேன் என்றும் இந்த அசல் வழக்கில் கண்ட வாதிகள், தாவா சொத்துக்களில் தங்களுக்கு 2/3 பாகம், பாகம் உரிமை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இந்த வழக்கு வாதிகள் வழக்கு சொத்துக்கள் ஆதியில் முத்துசாமி மற்றும் அவருடைய குமாரர்களான அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர்கள் அடங்கிய இந்து கூட்டு குடும்பத்திற்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்கள் என்றும் கூறி இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர்கள் ஆகிய தாங்கள் வாதி கூறியுள்ள அங்கப்பன் அவர்களுக்கு வாரிசுகள் ஆகும் என்றும் எனவே அங்கப்பனுக்கு இந்து கூட்டு குடும்பத்தில் சேரவேண்டிய பாகத்தில் அவர்களுடைய வாரிசுகளான தங்களுக்கும் பாகயுரிமை உள்ளது என்றும் எனவே தங்களையும் இந்த வழக்கில் சேர்த்து தங்களுக்கு சேரவேண்டிய பாகத்தையும் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று கோரி தாங்கள் இந்த வழக்கில் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் தாங்கள் இந்த வழக்கில் 6 முதல் 9 பிரதிவாதிகள் ஆக சேர்ப்பதற்கு முன்பாகவே வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மேற்படி வா.சா.1 முதல் 4 சாட்சிகளை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்தும், மேற்படி வா.சா. 1 முதல் வா.சா.4 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும் அவர்களை Recall செய்ய வேண்டி வாதிகளுக்கு உத்திரவு பிறப்பிக்க கோரி இந்த மனுவினை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1 முதல் வா.சா.4

சாட்சிகளை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அவர்களை Recall செய்து உத்தரவிட்டு வாதிகள் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது என்றும் இல்லையேல் தங்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**5. ஐ.ஏ.304/2023ல் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு (2ம் எதிர்மனுதாரர் அதனை அடாப்ட் செய்து கொள்கிறார்) :-**

தாவா அட்டவணை சொத்தில் 2/3 பாகம் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. 1, 2எதிர்மனுதாரர்கள் இறந்துபோன நாராயணன் என்பவரின் வாரிசு என்ற வகையிலும் 3ம் எதிர்மனுதாரர் தனபால் என்பவர் வாரிசு என்ற வகையிலும் 1/3 பாக உரிமை உள்ளதாக கோருகிறார்கள். மீதமுள்ள 1/3 அங்கப்பன் என்பவரின் மகன்கள் என்ற அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளுக்கும் இறந்துபோன மகளின் குழந்தைகள் என்பதால் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் பாத்தியமானது. எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணையில் மனுதாரர்கள் தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அங்கப்பன் என்பவரின் சட்டப்படியான பாகம் மறுக்கப்பட முடியாது. 2, 3 எதிர்மனுதாரர்கள் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டபோது மனுதாரர்களுக்கு அங்கப்பன் என்பவரின் சட்டப்படியான பாக உரிமைக்கு எதிராக எந்தவிதமான சாட்சியமும் அளிக்கப்படவில்லை. வா.சா. 3 மற்றும் வா.சா.4 தனி நபர் சாட்சிகள் அவர்களும் கூட்டுக்குடும்ப மற்றும் வாரிசுரிமை குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. ஒப்புக்கொள்ளப்பட்ட மனுதாரர்களின் உரிமை சாட்சியமளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே

மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

6. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் :-**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**8. தீர்வு :-**

இரு தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் மனுதாரர்கள் அசல் வழக்கில் 6 முதல் 9 பிரதிவாதிகள் வாதிகள் அவர்களுக்கு 2/3 பாக உரிமை உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு முன்பாகவே வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தினை திறவு செய்யவும் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்களை திரும்ப அழைக்கவும் மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் எதிர்மனுதாரர்கள் அவர்களுடைய சாட்சியத்திலும் அவர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் வா.சா.3, வா.சா.4 ஆகியோர்கள்

மனுதாரர்களுக்கு இறந்துபோன அங்கப்பன் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில் கிடைக்கக்கூடிய பாக உரிமைக்கு எதிராக எதுவும் சாட்சியம் அளிக்காத நிலையில் வாதிகள் தரப்பு சாட்சியம் மீண்டும் திறவு செய்யப்படவோ வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய தேவையில்லை என்பதால் மனுக்களை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. மனுதாரர்கள் புதிதாக சேர்க்கப்பட்ட பிரதிவாதிகள் அவர்கள் வழக்கில் சேர்வதற்கு முன்பாகவே வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டதற்கான இந்த பொருண்மைகள் மறுக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் மனுதாரர்கள் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்குவதே நீதியின்பாற் சரியானது என்பதால் இந்த மனு அனுதிக்கத்தக்கது என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே தீர்மானிக்கிறது.

முடிவாக, மனு செலவுத் தொகையின் அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 05.03.2024 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>இணைப்பு :-</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

(இல்லை)

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

(இல்லை.)

/ஒப்பம்/A. தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.